# மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 – 2022

### மானியக் கோரிக்கை எண். 52

## மு.க. ஸ்டாலின்
முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2021

# பொருளடக்கம்

| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| அ. | முகவுரை | 1-4 |
| ஆ. | நீடித்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals) | 4-10 |
| இ. | சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் | 10-12 |
| ஈ. | 2016-ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம் | 13-16 |
| உ. | நிர்வாக அமைப்பு | 16-18 |
| 1. | தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பதிவு செய்தல் | 18-19 |
| 2. | மாற்றுத்திறன் பெற்ற குழந்தைகளுக்கான சேவைகள் | 20 |
| | 2.1 செவித்திறன் பாதிப்பு – ஆரம்பநிலையிலேயே கண்டறிதல் | 20-22 |
| | 2.2 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் | 22-24 |

| | | | |
|---|---|---|---|
| | 2.3 | தாமத வளர்ச்சியுடைய குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே வீட்டிலேயே கண்டறியும் திட்டம் | 24-25 |
| | 2.4 | ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கான இணை மற்றும் சத்துணவு வழங்குதல் | 25 |
| | 2.5 | சிறப்பு கல்வியாளர்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாவலர்களுக்கான சுற்றுலா | 25-26 |
| | 2.6 | நடமாடும் சிகிச்சைப் பிரிவு | 26 |
| 3. | வள மற்றும் பயிற்சி மையங்கள் | | 27-28 |
| 4. | மறுவாழ்வு இல்லங்கள் | | 28 |
| | 4.1 | மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் | 29-30 |
| | 4.2 | மனவளர்ச்சிக் குன்றியோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் | 30-31 |
| | 4.3 | தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்கள் | 31-33 |

| | | | |
|---|---|---|---|
| | 4.4 | அரசு இரவலர் முகாம், மேல்பாக்கம் | 33-34 |
| 5. | பகல்நேர பராமரிப்பு மையங்கள் | | 34-35 |
| 6. | கல்வி பணிகள் | | 35-38 |
| | 6.1 | அரசு உதவிபெறும் சிறப்புப் பள்ளிகள் | 38-40 |
| | 6.2 | மாணவர்களுக்கு உதவித் தொகை | 40-41 |
| | 6.3 | வாசிப்பவர்களுக்கான உதவித்தொகை | 41-42 |
| | 6.4 | தேர்வெழுதுவோருக்கான உதவித்தொகை | 42-43 |
| | 6.5 | இடைநிற்றலை தடுக்க நிதியுதவி | 43 |
| | 6.6 | உயர்கல்விக்கான உதவி | 43-44 |
| | 6.7 | சட்டப்படிப்பு படித்தவர்களுக்கான உதவி | 44 |
| 7. | சமூகப் பொருளாதார முன்னேற்றம் | | 44 |
| | 7.1 | அரசு வேலைவாய்ப்பு | 45-46 |
| | 7.2 | தனியார் துறையில் வேலைவாய்ப்பு | 46 |
| | 7.3 | போட்டித்தேர்வுகளில் தேர்ச்சிப் பெறுவதற்கு ஊக்கத்தொகை | 46-47 |

| | | | |
|---|---|---|---|
| | 7.4 | சுயவேலைவாய்ப்பு | 47 |
| | 7.4.1 | மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்குதல் | 47 |
| | 7.4.2 | குறுதொழில் மற்றும் பெட்டிக்கடை துவங்க நிதியுதவி | 48 |
| | 7.4.3 | பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் | 48-49 |
| | 7.4.4 | வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டம் | 49 |
| | 7.4.5 | தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நிதியுதவி | 49-50 |
| | 7.4.6 | ஆவின் பாலகம் அமைப்பதற்கான நிதியுதவு | 50 |
| | 7.5 | பயிற்சி அளித்தல் | 50-51 |
| | 7.5.1 | புத்தக கட்டுநர் பயிற்சி | 51 |
| | 7.5.2 | பல்லூடகம் மற்றும் டிஜிட்டல் புகைப்படப் பயிற்சி | 51-52 |

| | | | |
|---|---|---|---|
| | 7.5.3 | செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கான பொருத்துநர் பயிற்சி | 52 |
| **8.** | உதவி உபகரணங்கள் வழங்குதல் | | 52 |
| | 8.1 | இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் | 53-54 |
| | 8.2 | காதுகளுக்குப் பின்புறம் அணியும் காதொலிக் கருவிகள் | 54 |
| | 8.3 | மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டோர்களுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலிகள் | 54-55 |
| | 8.4 | பார்வைத்திறன் குறைவுடையோருக்கான ஒளிரும் மடக்குக் குச்சிகள் | 55 |
| | 8.5 | குழந்தைகளுக்கான நடைபயிற்சி உபகரணங்கள் | 55 |
| | 8.6 | பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள் | 56 |

| | | | |
|---|---|---|---|
| | 8.7 | மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு நாற்காலிகள் | 56 |
| | 8.8 | திறன்பேசிகள் (Smart Phones) | 56-57 |
| 9. | தடையில்லா உட்கட்டமைப்பு | | 57-58 |
| | 9.1 | தடையில்லா சூழலுக்கான திட்டம் (Accessible India Campaign) | 58-59 |
| | 9.2 | ஒலியெழுப்பும் சமிக்ஞைகளை நிறுவுதல் | 60 |
| 10. | பல்வகை உதவித்தொகை வழங்குதல் | | 60 |
| | 10.1 | வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை | 60-61 |
| | 10.2 | பராமரிப்பு உதவித்தொகை | 61-62 |
| | 10.3 | அதிக உதவி தேவைப்படும் நபர்களுக்கு உதவித்தொகை | 62 |
| | 10.4 | திருமண உதவித்தொகை | 63 |
| | 10.5 | தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலவாரியம் | 63-67 |

| | | | |
|---|---|---|---|
| **11.** | பயணக்கட்டண சலுகை | | 67 |
| | 11.1 | நூறு சதவிகித பயணக்கட்டண சலுகை | 67-68 |
| | 11.2 | 75 சதவிகித பயணக் கட்டண சலுகை | 68 |
| **12.** | 1999-ஆம் ஆண்டு புற உலக சிந்தனையற்றோர், மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் பல்வகை குறைபாடுடையோரின் நலனுக்கான தேசிய அறக்கட்டளைச் சட்டம் | | 69 |
| **13.** | முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் | | 70 |
| **14.** | விழிப்புணர்வு பிரச்சாரம் | | 70 |
| **15.** | விருதுகள் | | 71 |
| | 18.1 | சுதந்திர தின விருதுகள் | 71-73 |
| | 18.2 | சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்திற்கான விருதுகள் | 73-75 |
| **16.** | புதிய முயற்சிகள் | | 75-82 |
| **17.** | முடிவுரை | | 83 |

# <u>பொருளடக்கம்</u>


| வ. எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| அ. | முகவுரை | | |
| ஆ. | நீடித்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals) | | |
| இ. | சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் | | |
| ஈ. | 2016-ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம் | | |
| உ. | நிர்வாக அமைப்பு | | |
| 1. | தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பதிவு செய்தல் | | |
| 2. | மாற்றுத்திறன் பெற்ற குழந்தைகளுக்கான சேவைகள் | | |
| | 2.1 | செவித்திறன் பாதிப்பு – ஆரம்பநிலையிலேயே கண்டறிதல் | |
| | 2.2 | மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் | |

| | | | |
|---|---|---|---|
| | 2.3 | தாமத வளர்ச்சியுடைய குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே வீட்டிலேயே கண்டறியும் திட்டம் | |
| | 2.4 | ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கான இணை மற்றும் சத்துணவு வழங்குதல் | |
| | 2.5 | சிறப்பு கல்வியாளர்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாவலர்களுக்கான சுற்றுலா | |
| | 2.6 | நடமாடும் சிகிச்சைப் பிரிவு | |
| 3. | வள மற்றும் பயிற்சி மையங்கள் | | |
| 4. | மறுவாழ்வு இல்லங்கள் | | |
| | 4.1 | மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் | |
| | 4.2 | மனவளர்ச்சிக் குன்றியோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் | |
| | 4.3 | தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்கள் | |

| | | | |
|---|---|---|---|
| | 4.4 | அரசு இரவலர் முகாம், மேல்பாக்கம் | |
| 5. | பகல்நேர பராமரிப்பு மையங்கள் | | |
| 6. | கல்வி பணிகள் | | |
| | 6.1 | அரசு உதவிபெறும் சிறப்புப் பள்ளிகள் | |
| | 6.2 | மாணவர்களுக்கு உதவித் தொகை | |
| | 6.3 | வாசிப்பவர்களுக்கான உதவித்தொகை | |
| | 6.4 | தேர்வெழுதுவோருக்கான உதவித்தொகை | |
| | 6.5 | இடைநிற்றலை தடுக்க நிதியுதவி | |
| | 6.6 | உயர்கல்விக்கான உதவி | |
| | 6.7 | சட்டப்படிப்பு படித்தவர்களுக்கான உதவி | |
| 7. | சமூகப் பொருளாதார முன்னேற்றம் | | |
| | 7.1 | அரசு வேலைவாய்ப்பு | |
| | 7.2 | தனியார் துறையில் வேலைவாய்ப்பு | |
| | 7.3 | போட்டித்தேர்வுகளில் தேர்ச்சிப் பெறுவதற்கு ஊக்கத்தொகை | |

| | | | |
|---|---|---|---|
| | 7.4 | சுயவேலைவாய்ப்பு | |
| | 7.4.1 | மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்குதல் | |
| | 7.4.2 | குறுதொழில் மற்றும் பெட்டிக்கடை துவங்க நிதியுதவி | |
| | 7.4.3 | பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் | |
| | 7.4.4 | வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டம் | |
| | 7.4.5 | தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நிதியுதவி | |
| | 7.4.6 | ஆவின் பாலகம் அமைப்பதற்கான நிதியுதவு | |
| | 7.5 | பயிற்சி அளித்தல் | |
| | 7.5.1 | புத்தக கட்டுநர் பயிற்சி | |
| | 7.5.2 | பல்லூடகம் மற்றும் டிஜிட்டல் புகைப்படப் பயிற்சி | |

| | | | |
|---|---|---|---|
| | 7.5.3 | செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கான பொருத்துநர் பயிற்சி | |
| **8.** | உதவி உபகரணங்கள் வழங்குதல் | | |
| | 8.1 | இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் | |
| | 8.2 | காதுகளுக்குப் பின்புறம் அணியும் காதொலிக் கருவிகள் | |
| | 8.3 | மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டோர்களுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலிகள் | |
| | 8.4 | பார்வைத்திறன் குறைவுடையோருக்கான ஒளிரும் மடக்குக் குச்சிகள் | |
| | 8.5 | குழந்தைகளுக்கான நடைபயிற்சி உபகரணங்கள் | |
| | 8.6 | பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள் | |

| | | | |
|---|---|---|---|
| | 8.7 | மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு நாற்காலிகள் | |
| | 8.8 | திறன்பேசிகள் (Smart Phones) | |
| 9. | தடையில்லா உட்கட்டமைப்பு | | |
| | 9.1 | தடையில்லா சூழலுக்கான திட்டம் (Accessible India Campaign) | |
| | 9.2 | ஒலியெழுப்பும் சமிக்ஞைகளை நிறுவுதல் | |
| 10. | பல்வகை உதவித்தொகை வழங்குதல் | | |
| | 10.1 | வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை | |
| | 10.2 | பராமரிப்பு உதவித்தொகை | |
| | 10.3 | அதிக உதவி தேவைப்படும் நபர்களுக்கு உதவித்தொகை | |
| | 10.4 | திருமண உதவித்தொகை | |
| | 10.5 | தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலவாரியம் | |

| | | |
|---|---|---|
| 11. | பயணக்கட்டண சலுகை | |
| | 11.1 நூறு சதவிகித பயணக்கட்டண சலுகை | |
| | 11.2 75 சதவிகித பயணக் கட்டண சலுகை | |
| 12. | 1999-ஆம் ஆண்டு புற உலக சிந்தனையற்றோர், மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் பல்வகை குறைபாடுடையோரின் நலனுக்கான தேசிய அறக்கட்டளைச் சட்டம் | |
| 13. | முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் | |
| 14. | விழிப்புணர்வு பிரச்சாரம் | |
| 15. | விருதுகள் | |
| | 18.1 சுதந்திர தின விருதுகள் | |
| | 18.2 சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்திற்கான விருதுகள் | |
| 16. | புதிய முயற்சிகள் | |
| 17. | முடிவுரை | |

# மாற்றுத்திறனாளிகள் நலத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2021-2022

## அ. முகவுரை

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கென தலைமைச் செயலக அளவிலும் மற்றும் துறை தலைமையளவிலும் இந்தியாவிலேயே தனித் துறையைக் கொண்ட தனிச் சிறப்பு பெற்ற ஒரே மாநிலமாக நமது தமிழ்நாடு திகழ்கின்றது. மேலும் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கள அலுவலங்களை இத்துறை கொண்டுள்ளது என்பது அரசின் மணிமகுடத்தில் மற்றுமொரு மாணிக்க மணியாகும். அரசால் மாற்றுத் திறனாளிகளைப் பரிவுடன் கவனித்துக் கொள்வதற்கும் அவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் / கொள்கைகள் தங்குதடையின்றி சென்றடைவதற்கும் இத்தகைய கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தகுந்த அம்சமாகும். இவர்களை மரியாதையுடன் குறிப்பிட வேண்டும் என்ற நோக்கத்தில்

“மாற்றுத்திறனாளிகள்” என்ற பதத்தை உருவாக்கியது அவர்கள் மீது முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் டாக்டர் மு.கருணாநிதி அவர்கள் கொண்டிருந்த பரிவை இயம்புவதாக உள்ளது. மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக நிறைவேற்றப்படும் திட்டங்களை மேற்பார்வையிடும் பொருட்டு இத்துறையை அவர் தனது கட்டுபாட்டில் வைத்திருந்தார். இம்மரபினை தொடர்ந்திடும் விதமாக தற்போதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கீழ் இத்துறை செயல்படுகிறது. மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அரசுக்கு பரிந்துரைத்திடும் பொருட்டு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தை அரசு அமைத்துள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கு தொடர்பு, பண்பாடு, பொருளாதாரம் சுற்றுச்சூழல் அரசியல், சமூக நிலைப்பாடு ஆகியவற்றில் உள்ள தடைகளை நீக்கி அவர்கள் அனைத்து அம்சங்களிலும் முன்னிலை பெறுவதை உறுதி செய்யும் பொருட்டு மைய அரசால் இயற்றப்பட்ட 2016-ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள்

உரிமைச் சட்டத்தினை நமது மாநிலத்தில் நடைமுறைப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு திறம்பட செய்து வருகிறது. மேலும் இச்சட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கு தேவையானவற்றை வரையறுத்து தமிழ்நாடு அரசும் 2018-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் உரிமைகளுக்கான விதிகளை இயற்றியுள்ளது.

மாற்றுத் திறனாளிகளுக்கு தகுந்த அடையாளம் அளித்திடும் பொருட்டு "மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை" இத்துறையால் வழங்கப்படுகிறது. மேற்படி சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறு மாற்றுத் திறனாளியாக இருக்கும் பட்சத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தை தொடர்பு கொண்டு அவர்களது மாற்றுத்திறன் குறித்து உரிய மருத்துவரால் சான்றளிக்கப்பட வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பின் அடிப்படையில் அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய அடையாள

அட்டைகள் துறையால் 1989-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருவதுடன் இது வரையில் சுமார் 13.35 இலட்சத்திற்கும் மேலான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசால் நடைமுறைப் படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களின் பயனைப் பெறுவதற்கு இந்த அடையாள அட்டை மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுகின்றது.

நமது மாநிலத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளின் மொத்த எண்ணிக்கை குறித்து அறிந்திடும் பொருட்டு மாநிலம் முழுவதும் விரிவான கணக்கெடுப்பினை நடத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### ஆ. நீடித்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals)

2015-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் 193 உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட “2030”-இல் நீடித்த வளர்ச்சி என்ற திட்டத்தினை இந்தியாவும் எற்றுக்கொண்டுள்ளது. இத்திட்டம் 17 நீடித்த வளர்ச்சி இலக்குகளை கொண்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகளை உள்ளடக்கிய அனைத்துத் தரப்பினரின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்த மேற்கண்ட இலக்குகளை அடைவதற்கு தமிழக அரசு முனைப்புடன் உள்ளது. அனைவருக்கும் சமநிலை என்பதை உறுதிபடுத்த "எவரும் விடுபடாவண்ணம் வளர்ச்சி" என்ற கோட்பாட்டை அனைத்து உறுப்பினர் நாடுகளும் கொண்டுள்ளது. "சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்களை முதலில் அடைவது" என்ற உறுதிமொழியை அனைத்து உறுப்பினர் நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்த நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடையும் பொருட்டு பல்வேறு திட்டங்கள் துறையால் நடைமுறைப்படுத்துவதுடன் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையில் மேற்கண்ட இலக்குகளை எய்துவதை கண்காணிக்கும் பொருட்டு தனி அலகு அமைக்கப்பட்டுள்ளது.

பல வகையான மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு தொகை வழங்குதல், மாற்றுத்

திறனாளிகளுடன் நடைபெறும் திருமணத்திற்கு உதவித் தொகை வழங்குதல், வேலை வாய்ப்பின்மைக்கான உதவித் தொகை வழங்குதல் ஆகியவற்றின் மூலம் முதல் இலக்கான வறுமை ஒழிப்பினை எய்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு சத்துணவு வழங்குதல், அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவூட்டு மானியம் வழங்குதல், ஆரம்பநிலை மையங்களில் உள்ளோர்க்கு சத்துணவு வழங்குதல் போன்றவற்றால் இரண்டாவது இலக்கான பட்டினியை போக்குதல் அடையப்படுகிறது. முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டம், அரசு மறுவாழ்வு இல்லங்களை நடத்துவது, மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு மறுவாழ்வு இல்லங்களை நடத்துதல், ஆரம்பநிலை மையங்கள் மற்றும் தசைச்சிதைவு நோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கு பகல்நேர பராமரிப்பு மையங்கள் நடத்துதல், துறையால் நடத்தப்படும் நடமாடும் சிகிச்சைப் பிரிவு ஆகியவை மூன்றாவது இலக்கான அனைவருக்கும் நல்வாழ்வு என்ற இலக்கினை எய்த

உதவுகின்றது. அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்விக்கான ஆலோசனை வழங்குதல், கல்வி உதவித்தொகை வழங்குதல், வாசிப்பாளர் உதவித்தொகை வழங்குதல், தேர்வு எழுத உதவுவோருக்கான உதவித்தொகை, மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு மின்னணு சாதனங்கள் வழங்குதல், இடைநிற்றலை தவிர்க்க மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் ஆகிய திட்டங்கள் நான்காவது இலக்கான தரமான கல்வி என்பதை அடைய உதவுகிறது. துறையால் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களும் எந்தப் பாலினத்தவராக இருந்தாலும் பயன் பெறுவதன் மூலம் ஐந்தாவது இலக்கான அனைத்து பாலினத்தவருக்கும் சமஉரிமை எய்தப்படுகிறது. தூய்மையான குடிநீர் மற்றும் சுத்தமான சூழலை அனைவரும் பெற தேவையான நடவடிக்கைகளை அரசு எடுப்பதன் மூலம் ஆறாவது இலக்கான தூய்மையான குடிநீர் மற்றும் சுத்தமான சூழலை அடைய முடிகிறது. ஏழாவது இலக்கான தூய்மையான மற்றும் குறைந்த விலையில் மின்சாரம் வழங்குவது

என்ற இலக்கு மரபு சாரா ஆற்றல்களான காற்றாலை, சூரிய சக்தி போன்றவற்றின் மூலம் எரிசக்தியை பெற்று வழங்குவதன் மூலம் அடையப்படுகிறது. எட்டாவது இலக்கான வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பது துறையால் நடைமுறைப்படுத்தப்படும் சுயவேலைவாய்ப்பு திட்டங்கள், வேலைவாய்ப்பிற்கான முகாம்களை நடத்துதல், மற்றும் கட்டுநர், பல்லூடக டிஜிட்டல் புகைப்பட பயிற்சி, பொருத்துநர் பயிற்சி ஆகியவற்றின் மூலம் எய்தப்படுகிறது. மாற்றுத் திறனாளிகள் அணுகுவதற்கு ஏதுவாக தடையற்ற சூழலை அனைத்து பொதுக் கட்டடங்களிலும் ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளில் அவர்களது பங்கினை உறுதி செய்வதன் மூலம் ஒன்பதாவது இலக்கான தொழிற்சாலை, நவீனம், உட்கட்டமைப்பு எய்தப்படுகிறது.

பத்தாவது இலக்கான ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல் என்பது மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புக் கல்வி அளிப்பதன் மூலமும் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்துவதன்

மூலமும் அடையப்படுகிறது. பதினொன்றாவது இலக்கான நகர மேம்பாடு தற்போதுள்ள மற்றும் புதிய கட்டடங்களை மாற்றுத் திறனாளிகள் அணுகுவதற்கு ஏற்றதாக மாற்றியமைத்தல், சாலை சந்திப்புகளில் ஒலி எழுப்பும் விதமான கைகாட்டிகளை நிறுவுதல், அரசுப் பேருந்துகளில் ஒலி எழுப்பும் கருவிகளை நிறுவுதல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் அடையப்படுகின்றது. பன்னிரெண்டாவது இலக்கான தரமான பொருட்கள் மற்றும் அவற்றின் நுகர்வு என்பது மாற்றுத் திறனாளிகளுக்கு வருவாயை பெருக்கும் நடவடிக்கைகளுக்கு கடனுதவி வழங்குவதன் மூலமும் சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கேற்ற பொருட்களை முடிந்த அளவில் உபயோகப்படுத்தவும் தயாரிக்கவும் ஊக்குவிப்பதன் மூலம் அடையப்படுகிறது. பதிமூன்றாவது இலக்கான பருவநிலை மாற்றம், பதினான்காவது இலக்கான நீர்நிலைக்கு கீழான வாழ்க்கை மற்றும் பதினைந்தாவது இலக்கான நிலத்தில் வாழ்க்கை ஆகியவை மாற்றுத் திறனாளிகளை உள்ளடக்கிய பொது மக்களிடம் இது குறித்து விழிப்புணர்வு

ஏற்படுத்துவதன் மூலம் எய்தப்படுகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் சிறப்பு அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் அனைத்து மாவட்டங்களிலும் நியமிக்கப்பட்டுள்ளதன் மூலம் பதினாறாவது இலக்கான அமைதி மற்றும் நீதி அடையப்படுகிறது. இந்த நீடித்த வளர்ச்சி இலக்குகளை எய்த அரசின் அனைத்துத் துறைகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், சமூகத்தில் உள்ளோரும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் பதினேழாவது இலக்கினை (கூட்டு முயற்சி) எய்த முடிகிறது.

### இ. சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்

ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் திங்கள் மூன்றாம் நாள் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினமாக கொண்டாடப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. மாற்றுத்திறனாளிகளின் தேவைகள் குறித்து சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அவர்களுக்கு உரிய மரியாதையை வழங்கவும் கலை மற்றும் விளையாட்டுகளில் அவர்களின் திறமைகளை

வெளிக்கொணரும் விதமாக சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் தமிழகத்தில் சீரும் சிறப்புமாக கொண்டாடப்படுகிறது. பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

2016-ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் 21-வது பிரிவில் தெரிவிக்கப்பட்டவாறு 20 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களை கொண்ட தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகளால் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களை கண்டறிந்து தனியார் மற்றும் அரசுத் துறைகளில் அப்பணியிடங்களில் மாற்றுத் திறனாளிகளை பணியமர்த்த ஏதுவாக "சம வாய்ப்புக் கொள்கை" ஒன்றினை சமர்ப்பித்திட வேண்டும். அத்தகைய கொள்கையினை வெளியிட துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய வேலை வாய்ப்பினை ஏற்படுத்திடும் பொருட்டு "அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்கும்

கொள்கையை" (Equal Opportunity Policy) உருவாக்க அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான தங்கு தடையற்ற சூழலுடன் கூடிய சமூகத்தை உருவாக்கிட உறுதி பூண்டுள்ள அரசு அந்த இலக்கினை எய்திட பல்வேறு புதுமையான திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. இத்திட்டங்களின் செயல்பாட்டினை தீவிரமாக கண்காணிப்பதன் மூலம் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும்.

மாற்றுத்திறனாளிகள் நலத் துறைக்காக 2021-2022-ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையான ரூ.813.63 கோடியானது இதுகாறும் ஒதுக்கப்பட்ட தொகைகளிலேயே அதிகமானது என்பதுடன் மாற்றுத் திறனாளிகளின் மேம்பாட்டில் அரசு கொண்டுள்ள உறுதியினை பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

## ஈ. 2016-ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம்

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் இயற்றப்பட்ட 2016-ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம் இதேபோன்ற 1995-ஆம் ஆண்டிற்கான சட்டத்தை மாற்றும் வகையில் இயற்றப்பட்டு 19.04.2017 முதல் அமலுக்கு வந்துள்ளது. மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளுக்கு சட்டப்பூர்வமான அங்கீகாரத்தை வழங்குவதுடன் அவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்த பல்வேறு அம்சங்களை கொண்டுள்ளது. மாற்றுத் திறனாளிகள் அனைவரும் கௌரவத்தோடும் பாகுபாடுயின்றியும் நடத்தப்பட வேண்டுமென வகுத்துள்ளது. சமுதாயத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் இவர்களது பங்கினை உறுதிசெய்யும் அதே வேளையில் அவர்களுக்கு அதிகாரம் வழங்குவதாகவும் அமைந்துள்ளது. இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துதில் தமிழக அரசு உறுதி பூண்டுள்ளதுடன் இந்நோக்கத்தினை அடையும் பொருட்டு 2018-ஆம் ஆண்டு

மாற்றுத்திறனாளிகள் உரிமை விதிகளை இயற்றியுள்ளது. 1995-ஆம் ஆண்டைய சட்டம் ஏழு விதமான மாற்றுத் திறனாளிகளை மட்டுமே அங்கீகரித்த நிலையில் தற்போதைய சட்டம் குறைவான வளர்ச்சி, தசைச்சிதைவு நோய், அமிலத்தாக்குதலால் உருவத்தோற்றம் பாதிக்கப்பட்டவர்கள், கற்றலில் குறைபாடு உடையவர்கள், தண்டுவடமரப்பு நோய் பார்க்கின்சன் நோய், ஹிமோபீலியா, தலசிமியா, சிக்கிள் செல் அனீமியா போன்ற இருபத்தொன்று விதமான மாற்றுத்திறன் வகைகளை உள்ளடக்கியதாகும்.

**இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருவனவாகும்.**

i) இச்சட்டத்தின் அம்சங்களை நடைமுறைப்படுத்திட உரிமையியல் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரங்களை கொண்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரை நியமப்பது.

ii) அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்களை உள்ளடக்கிய அனைத்து விதமான அரசு பணியமைப்பிலும் நான்கு சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்குவது.

iii) அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்கல்வி நிறுவனங்களில் ஐந்து சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவது.

iv) அரசுத் துறைகளில் "அனைவருக்கும் சமஉரிமை" என்ற கொள்கையை உருவாக்கி மாநில ஆணையரிடம் பதிவு செய்வது.

v) மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசிற்கு அறிவுரை வழங்கும் பொருட்டு வாரியம் அமைப்பது.

vi) அரசுத் துறைகளில் பணிபுரியும் மாற்றுத் திறனாளிகளின் குறைகளைக் களையும் பொருட்டு அனைத்து துறைகளிலும் குறைகளையும் அலுவலரை நியமிப்பது.

vii) மாற்றுத் திறனாளி என்ற காரணத்திற்காக பதவி உயர்வு வழங்காமல் இருப்பதை தடுப்பது.

viii) இச்சட்டத்தின் படி குற்றமெனக் கருதப்படுவதற்கு எதிரான வழக்குகளை தீர்வு செய்ய சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் சிறப்பு அரசு குற்றவியல் வழக்கறிஞர்களை நியமிப்பது.

ix) மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக செலவிடும் பொருட்டு மாநில நிதியம் உருவாக்குவது.

x) பொது கட்டடங்கள், பொது போக்குவரத்து மற்றும் பொது இணையதளங்களில் மாற்றுத்திறனாளிகள் அணுகுவதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவது.

## உ. நிர்வாக அமைப்பு

சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் இத்துறையின் தலைவர் ஆவார். 2016-ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையராகவும் இவர் பணியாற்றுகிறார். தலைமையிடத்தில் ஓர் இணைஇயக்குநர், இரண்டு

துணை இயக்குநர்கள், மூன்று உதவி இயக்குநர்கள் ஆகியோர் இவருக்கு உதவுகின்றனர். அரசால் நடத்தப்படும் 22 சிறப்பு பள்ளிகளை நிர்வகிக்கும் பொருட்டு தலைமையிடத்தில் தனிப்பிரிவு செயல்படுகின்றது.

மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலரின் தலைமையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கள அலுவலகங்கள் உள்ளன. மாற்றுத் திறனாளிகளுக்கான சேவைகள் தங்குதடையின்றி கிடைத்திடும் பொருட்டு புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களான செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், தென்காசி ஆகிய இடங்களில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலங்கள் தோற்றுவிக்கப்பட்டு சமீபத்தில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக அரசால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மூலம்

நிறைவேற்றப்படுவதால் மாவட்ட அலுவலகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன.

மாற்றுத்திறனாளிகளின் நலன் தொடர்பான திட்டங்களின் செயல்படுகளை நிறைவேற்றுவதுடன் இவர்களுக்காக செயல்படும் தொண்டு நிறுவனங்களுக்கு பல்வேறு விதமான உதவிகளையும் துறை செய்கின்றது. துறையால் வழங்கப்படும் சேவைகள் குறித்து பின்வருமாறு விளக்கப்படுகிறது:-

**1. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைப் பதிவு செய்தல்**

2016-ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் படி மாற்றுத் திறனாளிகளுக்காக மறுவாழ்வு மையங்களை நடத்தும் நிறுவனங்கள் அதற்கான பதிவினை மாநில மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரிமிடருந்து சான்றுடன் பெற வேண்டும். அதற்கேற்ப மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு சேவைகள் புரியும் விதமாக அம்மறுவாழ்வு மையங்களை நிறுவ

203 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1973-ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் கட்டுபாட்டு சட்டம் மற்றும் அதன் கீழான விதிகளின் படி மாற்றுத் திறனாளி மாணவர்களுக்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகள் மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரால் அங்கீகரிக்கப்படுகின்றன. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட 369 சிறப்புப் பள்ளிகள் இன்றளவில் உள்ளன.

2002-ஆம் ஆண்டு தமிழ்நாடு மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு மையங்களில் பதிவு விதிகள் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு மையங்களை கட்டுப்படுத்த வழிவகை செய்கின்றது. நாளதுவரை 85 மையங்கள் துறையால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 2. மாற்றுத்திறன் பெற்ற குழந்தைகளுக்கான சேவைகள்

### 2.1. செவித்திறன் பாதிப்பு – ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல்

செவித்திறன் பாதிப்பு குறித்து ஆரம்பநிலையிலேயே கண்டறிந்து அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ளும் பொருட்டு நமது மாநிலத்தின் 28 மாவட்டங்களில் செவித்திறன் பாதிக்கப்பட்ட ஆரம்பநிலை கண்டறிதல் மற்றும் சிகிச்சை மையங்கள் உள்ளன. குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் செவித்திறன் பாதிப்பு குறித்து கண்டறிந்து தேவையானவர்களுக்கு காதொலி கருவிகள் வழங்குதல் மற்றும் தொடர்புடைய சிகிச்சைகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை இம்மையங்கள் செய்கின்றன. 2020-2021-ஆம் ஆண்டில் இம்மையங்கள் மூலம் 6064 நபர்கள் கண்டறியப்பட்டதுடன் இதுவரையில் இம்மையங்கள் மூலம் 32013 நபர்கள் கண்டறியப்பட்டுள்ளன.

சென்னையிலுள்ள மாநில வள மற்றும் பயிற்சி மையத்தில் செவித்திறன் பாதிப்பு மற்றும் நரம்பியல்

வளர்ச்சி தாமதம் குறித்து புதிதாக பிறந்த குழந்தைகள் சோதனை செய்யப்பட்டு இதுவரையில் செவித்திறன் குறைபாடு கண்டறியப்பட்ட 1325 குழந்தைகளுக்கு ஆரம்பநிலை பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

சென்னையிலுள்ள 11 மகப்பேறு மருத்துவமனைகளிலும், சிவகங்கை மாவட்டத்தின் மாவட்ட மற்றும் வட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் நிலை உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையங்கள் என 21 மருத்துவமனைகளிலும் புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு செவித்திறன் பாதிப்பு குறித்து கண்டறியப்பட்டு அவர்களுக்கு மேல் சிகிச்சை செய்யும் திட்டம் துறையால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. 2021-2022-ஆம் ஆண்டு இத்திட்டத்தில் 23,055 குழந்தைகள் பரிசோதனை செய்யப்பட்டு சென்னை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் முறையே 17 மற்றும் 38 என மொத்தம் 55 குழந்தைகளுக்கு செவித்திறன் பாதிப்பு கண்டறியப்பட்டு அவர்கள் உயர் சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். இக்குழந்தைகளின் செவித்திறன் குறித்து கண்டறிய பெற்றோருக்கு

ஆலோசனை வழங்கப்படுவதுடன் குழந்தை பிறந்து மூன்று மாதங்கள் கழித்து பரிசோதனைக்கு அழைத்து வர கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இக்குழந்தைகள் துறையின் தொடர் மேற்பார்வையில் இருந்து வருகின்றனர்.

## 2.2.மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள்

ஆறு வயதிற்குட்பட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு உரிய பயிற்சி வழங்கும் பொருட்டு பல்வேறு மாவட்ட தலைநகரங்களில் ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நிறுவப்பட்டுள்ளன. இக்குழந்தைகள் பள்ளிகளில் சேர்வதற்கான உரிய பயிற்சிகளை இம்மையங்கள் வழங்குகின்றன. மாநிலத்தில் மொத்தம் இவ்வாறான 92 மையங்கள் உள்ளதுடன் அவற்றில் 2275 குழந்தைகள் பயிற்சி அளிக்கப்படுகின்றன. இம்மையங்களில் மொத்தம் 279 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கின்றனர். இவர்களுக்கு மாதந்தோறும் ரூ.14,000/- மதிப்பூதியமாக அரசால்

வழங்கப்படுகிறது. பயிற்சி அளிக்கப்படும் குழந்தைகளின் தன்மையைப் பொருத்து பல்வேறு விதமான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் பின்வருமாறு உள்ளன:-

| ஆரம்பநிலை பயிற்சி மையத்தின் வகைப்பாடு | மொத்தம் உள்ள மையங்கள் | மொத்த குழந்தைகளின் எண்ணிக்கை | சிறப்பு கல்வியாளர்களின் எண்ணிக்கை | 2021-2022 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கான ஆரம்பநிலை பயிற்சிமையம் | 33 | 504 | 63 | 114.64 |
| மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் | 31 | 1120 | 140 | 286.44 |
| பார்வை குறைபாடுடையவருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம் | 6 | 96 | 12 | 24.60 |
| மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம் | 2 | 75 | 5 | 13.38 |

| | | | | |
|---|---|---|---|---|
| புறஉலக சிந்தனையற்றோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம் | 19 | 456 | 57 | 18.96 |
| திருச்சிராப்பள்ளியில் உள்ள பல்வகை மாற்றுத் திறனாளிகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம் | 1 | 24 | 2 | 3.84 |

## 2.3. தாமத வளர்ச்சியுடைய குழந்தைகளை ஆரம்பநிலையிலேயே வீட்டிலேயே கண்டறியும் திட்டம்

ஆறு வயதிற்குட்பட்ட தாமத வளர்ச்சியுடைய குழந்தைகளை ஆரம்பநிலையிலேயே அவர்தம் இல்லங்களில் கண்டறியும் திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தின் 11 வட்டாரங்களிலும் தூத்துக்குடி மாவட்டத்தில் 12 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. தாமத வளர்ச்சியுடைய 1686 குழந்தைகள் கண்டறியப்பட்டு உடலியக்கப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி போன்றவை "கிராமம் சார்ந்த மறுவாழ்வு

முயற்சி” (mobile Village Based Rehabilitation Initiative (mVBRI) செயலி மூலம் அளிக்கப்பட்டு வருகின்றது.

## 2.4. ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கான இணை மற்றும் சத்துணவு வழங்குதல்

ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தில் அங்கன்வாடி மையங்களிலிருந்து இணை மற்றும் சத்துணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 69 ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிலும் 1724 குழந்தைகள் பயன்பெற 2021-2022 வரவுசெலவு திட்டத்தில் ரூ.3.45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2.5.சிறப்பு கல்வியாளர்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாவலர்களுக்கான சுற்றுலா

ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் உள்ள சிறப்பு கல்வியாளர்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாவலர்களை நல்ல மனநிலையில் வைத்திடும்

நோக்கத்துடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலமாக ஒரு நாள் சுற்றுலா ஏற்பாடு செய்யப்படுகிறது. 2021-2022-ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.7.46 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2.6. நடமாடும் சிகிச்சைப் பிரிவு

ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் பெரும்பாலும் மாவட்ட தலைநகரங்களிலேயே உள்ளதால் அவ்விடங்களை தவிர வேறு இடங்களில் வசிக்கும் குழந்தைகளுக்கு சேவை செய்யும் பொருட்டு நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் துறையால் நடத்தப்படுகின்றன. உடற்பயிற்சி, பேச்சுப் பயிற்சி, சிறப்புக் கல்வி மற்றும் இதர மறுவாழ்வு பணிகள் இப்பிரிவுன் மூலம் பயனாளிகளின் இல்லத்திற்கே சென்று வழங்கப்படுகின்றன. இதுவரை 97426 நபர்களுக்கு இச்சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. 2021-2022-ஆம் ஆண்டில் இதற்கென ரூ.190.15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3. வள மற்றும் பயிற்சி மையங்கள்

சென்னையிலுள்ள மாநில வள மற்றும் பயிற்சி மையம் மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள மண்டல வள மற்றும் பயிற்சி மையம் என மொத்தம் 2 வள மற்றும் பயிற்சி மையங்கள் உள்ளன. இவ்விரண்டு மையங்களும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் அரசால் நடத்தப்படுகின்றன. இம்மையங்களின் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு சேவைகள் புரிவதுடன் அவர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ளோருக்கு சென்னை மையமும் தென்மாவட்டங்களில் உள்ளோருக்கு திருச்சிராப்பள்ளி மையமும் சேவை புரிகின்றன.

அரசால் வழங்கப்பட கூடிய பல்வேறு விதமான உதவிகளை பெறுவதற்கு ஏதுவாக உள்ள மாற்றுத்திறனாளி சான்றிதழ்கள் இம்மையங்கள் மூலம் வழங்கப்படுகிறது. 2020-2021-ஆம் ஆண்டில் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி மையங்கள் மூலம்

முறையே 4478 மற்றும் 2332 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

2021-2022-ஆம் ஆண்டிற்கான நிதியொதுக்கீடு சென்னை மையத்திற்கு ரூ.35.66 இலட்சமாகவும் திருச்சிராப்பள்ளி மையத்திற்கு ரூ.22.07 இலட்சமாகவும் உள்ளது.

இதேபோன்ற சேவைகளை வழங்குவதற்கு ஒன்றிய அரசின் மூலம் மதுரையில் ஒருங்கிணைந்த மண்டல மையம் நிறுவப்படவுள்ளது.

**4. மறுவாழ்வு இல்லங்கள்**

மாற்றுத்திறனாளிகள் அவர்களது உபாதைகளிலிருந்து விரைவில் நலம் பெற்று மறுவாழ்வு பெறுவதை உறுதி செய்ய மறுவாழ்வு மையங்களை நிறுவுதல் அவசியமாகும். அரசால் நடத்தப்படும் பல்வேறு விதமான மறுவாழ்வு மையங்களின் விவரம் பின்வருமாறு:-

## 4.1. மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு மையங்கள்

மனநலம் பாதிப்பு தீர்க்கப்படக் கூடியது என்பதுடன் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து மீள உரிய சிகிச்சை வழங்குவது அவசியமாகும். இத்தகையோருக்கான மறுவாழ்வு மையங்கள் ஒவ்வொன்றிலும் 50 நபர்களுடன் 53 இடங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்ளால் அரசின் உதவியுடன் நடத்தப்படுகின்றன. மனநலம் பாதிப்படைந்தோருக்கான உணவு, தங்குமிடம் உரிய மருத்துவ வசதிகள் போன்றவை இம்மையங்களின் மூலம் வழங்கப்படுகின்றன.

2021-2022-ஆம் ஆண்டில் இதற்கென ரூ.621.35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மனநல பாதிப்பிலிருந்து நலன்பெற்று மருத்துவமனைகள் மற்றும் மறுவாழ்வு மையங்களிலிருந்து வெளியேறியவர்களுக்காக மதுரை, இராமநாதபுரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் ரூ.40.10 இலட்சம்

செலவில் இடைநிலை பராமரிப்பு இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மனநல பாதிப்பால் சாலைகளில் சுற்றித்திரிவோர், குடும்பத்தினரால் கைவிடப்பட்டோர் ஆகியோருக்கு உரிய சிகிச்சை வழங்கும் பொருட்டு "மீட்புத் திட்டம்" என்ற ஒரு திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்துகிறது. 2020-2021-ஆம் ஆண்டில் 499 நபர்கள் மீட்கப்பட்டு பராமரிப்பு மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். 2021-2022-ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.7.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 4.2.மனவளர்ச்சிக் குன்றியோருக்கான மறுவாழ்வு மையங்கள்

14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சிக் குன்றியோருக்கான மறுவாழ்வு மையங்கள் 42 இடங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் அரசின் நிதியுதவியுடன் நடத்தப்படுகின்றன. இந்த 42 மையங்களில், 16 மையங்கள் ஆடவருக்காகவும், 19 மையங்கள் பெண்டிருக்காகவும் மற்றும்

7 மையங்கள் இருபாலருக்காகவும் செயல்படுகின்றன. உணவு, உறைவிடம் மற்றும் மருத்துவ வசதி அளிப்பதுடன் இம்மையங்கள் மெழுகுவர்த்தி செய்தல், அடுமனை மற்றும் தோட்டக்கலை ஆகியவற்றில் பயிற்சியும் வழங்குகின்றன.

2021-2022 ஆம் ஆண்டு இதற்கென ரூ.774.26 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 4.3. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு மையங்கள்

தொழுநோயால் பாதிக்கப்பட்டவர் களுக்கு உரிய சிகிச்சை வழங்கிடும் பொருட்டு பரனூர், உளுந்தூர்பேட்டை, பர்கூர், புதுக்கோட்டை, மனையேறிப்பட்டி, யா.புதுப்பட்டி, மல்லவாடி, செல்லியாம்பட்டி, தேவியாகுறிச்சி, விண்ணப்பள்ளி ஆகிய பத்து இடங்களில் அரசால் மறுவாழ்வு இல்லங்கள் நடத்தப்படுகின்றன. நாளது தேதியில் இம்மையங்களில் மொத்தம் 614 இல்லவாசிகள் உள்ளனர். பாதிக்கப்பட்டோர் சுயமாகவோ அல்லது தகுதியுடைய மருத்துவரிடம் சான்று பெற்றோ

இம்மையங்களில் சேரலாம். நோயாளிகளுடன் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் பராமரிக்கப்படுகின்றனர். பாதிப்பிலிருந்து குணமடைந்த உடன் தங்களது சுய விருப்பத்தின் அடிப்படையில் இம்மையங்களிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். பிச்சை எடுப்பதில் ஈடுபடும் தொழுநோயாளிகள் நீதிமன்றங்களால் 'குற்றவாளி' என தீர்ப்பளிக்கும் பட்சத்தில் உளுந்தூர்பேட்டையில் உள்ள இல்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். உணவு, உறைவிடம், உடுக்க உடை, மருத்துவ வசதிகள் இல்லவாசிகளுக்கு வழங்கப்படுகின்றன. வயதான மற்றும் குழந்தை இல்லவாசிகளுக்கு முறையே மாதமொன்றுக்கு ரூ.1200/- மற்றும் ரூ.1110/- என்ற விகிதத்தில் உணவு வழங்கப்படுகிறது. தீபாவளி, பொங்கல், சுதந்திர தினம், குடியரசு தினம், காந்தி ஜெயந்தி போன்ற பண்டிகை தினங்களில் இல்ல வாசிகளுக்கு சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

இல்லவாசிகளுக்கு பாய் நெய்தல், துணி நெய்தல், தையல் மற்றும் காலணி தயாரிப்பு போன்ற

பல்வேறு தொழிற்பயிற்சி அளிக்கப்படுவதுடன் அவர்களால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கேற்ப ஊதியமும் வழங்கப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகையையொட்டி இல்ல வாசிகளுக்கு உடைகள் வழங்கப்படுவதுடன் இரப்பர் காலணி மற்றும் பாய் போன்றவையும் வழங்கப்படுகின்றன. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை போர்வை வழங்கப்படுகிறது.

இத்தகைய இல்லங்களை நடத்துவதற்கு 2021-2022-ஆம் ஆண்டு ரூ.959.39 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 4.4. அரசு இரவலர் முகாம், மேல்பாக்கம்

பிச்சை எடுப்போர், 1945-ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுத்தலை தடை செய்யும் சட்டத்தின் கீழ் நீதிமன்றங்களால் தண்டிக்கப்படும்பட்சத்தில் அவர்களது தண்டனைக் காலம் முழுவதும் இம்மையங்களில் பராமரிக்கப்படுகின்றனர். சமீப காலங்களில் அவ்வாறு தண்டிக்கப்பட்டவர்கள் எவரும்

இல்லை என்பதனால் இம்மையத்தில் தற்போது எவரும் இல்லை.

## 5. பகல்நேர பராமரிப்பு மையங்கள்

மாற்றுத்திறனாளிகளுக்கு பகல் நேரங்களில் பல்வேறு சேவைகளை அளித்திட பகல்நேர பராமரிப்பு மையங்கள் செயல்படுகின்றன. தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள் மாநிலம் முழுவதிலும் 14 இடங்களில் செயல்படுவதுடன், இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி, உடற்பயிற்சி வழங்குவதுடன் தசைகள் மேலும் பலவீனம் அடையாமல் இருப்பதை உறுதி செய்கின்றன. அரசின் நிதியுதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் இம்மையங்களில் 360 நபர்கள் சிகிச்சை பெறுகின்றனர். 2021-2022-ஆம் ஆண்டில் இதற்கென ரூ.301.99 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மனவளர்ச்சிக் குன்றியோருக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள் தேனி மாவட்டத்தில் மூன்று

இடங்களில் செயல்படுகின்றது. இம்மையங்களுக்கு உதவிடும் பொருட்டு 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.14.52 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 6. கல்வி பணிகள்

மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு உரிய கல்வி அளிக்கப்பட வேண்டியதன் அத்தியாவசியத்தை உணர்ந்துள்ள அரசு அவர்களுக்கு கல்வி வழங்கும் பொருட்டு 22 சிறப்புப் பள்ளிகளை மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் நடத்துகின்றது. இக்குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் அரசு உதவியுடன் 50 சிறப்புப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இந்த 72 பள்ளிகளில் 6400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலுகின்றனர். அரசால் நடத்தப்படும் 22 சிறப்புப் பள்ளிகளில் கண்பார்வையற்றோருக்காக பூந்தமல்லி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் நடத்தப்படும் பள்ளிகளும் செவித்திறன் பாதிப்படைந்தோருக்காக தஞ்சாவூர் மற்றும் தர்மபுரியில் நடத்தப்படும் பள்ளிகளும் மேல்நிலைப்

பள்ளிகளாகும். அரசால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகளில் தரமான கல்வி வழங்கப்படுவதுடன் இவற்றில் மாணவர்களுக்கு உறைவிடமும் இலவசமாக வழங்கப்படுகிறது. இப்பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு வழங்கப்படுவதுடன் அதற்கான மானியமாக மாதமொன்றிற்கு ஒரு மாணவருக்கு ரூ.900/- வழங்கப்படுகிறது. அரசு சிறப்புப் பள்ளி மாணவர்கள் ஒரு நாள் மற்றும் மூன்று நாட்கள் சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கான ஒன்பது சிறப்புப் பள்ளிகளில் திறன் மேம்படுத்தப்பட்ட வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்பத்தில் தரமான கல்வியினை வழங்கும் பொருட்டு அனைத்து அரசுப் பள்ளிகளிலும் கணினி ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பார்வை குறையுடையோருக்கான 10 அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் நலனுக்காக துணி துவைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவர்களுக்கு

204 மின்னணு Braily Readers ரூ.69.91 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

அரசு சிறப்புப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு உணவுக் குறைபாடு கண்டறியும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேல்நிலை பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் தொடர வேண்டிய உயர்கல்வியை குறித்து அவர்களது அறிவுத்திறன் அடிப்படையில் ஆலோசனை வழங்கப்படுகிறது.

அரசால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்ளும், நோட்டுப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இவர்களுக்கு நான்கு சீருடைகள் வழங்கப்படுவதுடன் இத்திட்டத்திற்காக 2021-2022-ஆம் ஆண்டில் ரூ.10.03 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சேலத்திலுள்ள அரசு செவித்திறன் குறையுடையோருக்கான உயர்நிலைப் பள்ளிக்கான

புதிய கட்டடம் ரூ.6.70 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது.

12 சிறப்புப் பள்ளிகளில் பார்வைத்திறன் குறைவுடையோருக்கான திறன் மேம்படுத்தப்பட்ட வகுப்பறைகள் ஒவ்வொரு பள்ளிகளுக்கும் ஒரு வகுப்பறை என ரூ.1.08 கோடி செலவில் அமைக்கப்படவுள்ளன.

பூந்தமல்லி, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள பார்வை குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு Angel Pro Daisy Player என்னும் நவீன மின்னணு சாதனம் ரூ.10.10 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

### 6.1. அரசு உதவிபெறும் சிறப்புப் பள்ளிகள்

தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களுக்கு அரசால் ஊதியம் வழங்கப்படுகிறது. இத்துடன் ஒவ்வொரு பள்ளியிலும்

அதிகபட்சமாக மூன்று சிறப்பு ஆசிரியர்களுக்கு ரூ.14,000/- மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் ஆண்டில் இதற்காக ரூ.313.17 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவூட்டு மானியம் வழங்க 2021-2022-ஆம் ஆண்டில் ரூ.271.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணியாற்றும் சிறப்பு ஆசிரியர்கள் உடற்பயிற்சி பயிற்றுநர்கள் மற்றும் பேச்சுப் பயிற்சியாளர்களுக்கும் மாதம் ரூ.14,000/- மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது.

2021-2022-ஆம் ஆண்டில் இதற்காக ரூ.1597.56 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தேனி, கடலூர் மாவட்டங்களில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சி மையங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால்

அரசின் நிதியுதவியுடன் நடத்தப்படுகின்றன. 2021-2022-ஆம் ஆண்டு இதற்காக தேனி மாவட்டத்திற்கு ரூ.8.65 இலட்சமும் கடலூர் மாவட்டத்திற்கு ரூ.10.77 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் மனவளர்ச்சிக் குன்றியவர்களுக்காக நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகளுக்கு அரசால் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்தகைய சிறப்புப் பள்ளிகளில் 7862 மாணவர்கள் பயில்கின்றனர். 2021-2022-ஆம் ஆண்டு இதற்காக ரூ.618.53 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 6.2. மாணவர்களுக்கு உதவித்தொகை

மாற்றுத் திறனாளி மாணவர்கள் தடையின்றி கல்வி கற்கவும் அதற்காக ஏற்படும் செலவினங்களை மேற்கொள்ளவும் அவர்கள் பயிலும் வகுப்பிற்கேற்ப உதவித்தொகை வழங்கப்படுகிறது. இவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | பாடப்பிரிவு | உதவித்தொகை ஒரு வருடத்திற்கு |
|---|---|---|
| 1. | 1 - முதல் 5 -ஆம் வகுப்பு வரை | ரூ.1,000/- |
| 2. | 6-ஆம்வகுப்பு முதல் 8-ஆம்வகுப்பு வரை | ரூ.3,000/- |
| 3. | 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை | ரூ.4,000/- |
| 4. | இளங்கலை பட்டப்படிப்பு | ரூ.6,000/- |
| 5. | தொழிற்கல்வி மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு | ரூ.7,000/- |

கடந்த 2020-2021-ஆம் ஆண்டில் 19675 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. 2021-2022-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.681.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 6.3. வாசிப்பவர்களுக்கான உதவித்தொகை

ஒன்பதாம் வகுப்பு முதல் பயிலும் பார்வை குறைபாடு உடைய மாணவர்களுக்கு உதவியாக வாசிப்பவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது.

மாணவர்கள் பயிலும் வகுப்பிற்கேற்ப இது மாறுபடும். அதன் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | பாடப் பிரிவு | வாசிப்பாளர் உதவித்தொகை |
|---|---|---|
| 1. | 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை | ரூ.3,000/- |
| 2. | இளங்கலை பட்டப்படிப்பு | ரூ.5,000/- |
| 3. | தொழிற்படிப்பு மற்றும் முதுகலைப் பட்டபடிப்பு | ரூ. 6,000/- |

கடந்த 2020-2021-ஆம் ஆண்டில் 1980 மாணவர்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர். 2021-2022 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.100.00 இலட்சம் நிதியொதுக்கப்பட்டுள்ளது.

## 6.4.தேர்வெழுதுவோருக்கான உதவித் தொகை

ஒன்பதாம் வகுப்பிற்கு மேல் பயிலும் பார்வை குறையுடைய மாணவர்கள் தேர்வெழுதும் பொருட்டு ஒரு உதவியாளரை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவதுடன் அதற்கு உதவித் தொகையாக ரூ.300/- வழங்கப்படுகிறது.

கடந்த 2020-2021-ஆம் ஆண்டில் 533 நபர்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர். 2021-2022-ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.44.85 இலட்சம் நிதியொதுக்கப்பட்டுள்ளது.

### 6.5. இடைநிற்றலை தடுக்க நிதியுதவி

கல்வி பயில்வதிலிருந்து இடைநிற்றலை தடுக்க 10 மற்றும் 11-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகையாக ரூ.1500/-ம் 12-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகையாக ரூ.2,000/-மும் வழங்கப்படுகிறது.

2021-2022 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.24.45 இலட்சம் நிதியொதுக்கப்பட்டுள்ளது.

### 6.6. உயர்கல்விக்கான உதவி

துறையால் வழங்கப்படும் பள்ளிக்கல்வி சேவையை தொடர்ந்திடும் பொருட்டு சென்னை மாநிலக் கல்லூரியில் செவித்திறன் குறையுடையோருக்கான இளங்களை வணிகவியல் மற்றும் இளங்கலை கணினி ஆகிய பட்டப்படிப்புகள் வழங்கப்படுகின்றன. இப்பிரிவுகளில் பணிபுரியும்

விரிவுரையாளர்களுக்கு மாதம் ரூ.15,000/- அரசால் ஊதியம் வழங்கப்படுகிறது. 2021-2022-ஆம் ஆண்டு இதற்காக ரூ.8.56 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 6.7. சட்டப்படிப்பு படித்தவர்களுக்கான உதவி

சட்டப்படிப்பு படித்த மாற்றுத் திறனாளிகள் வழக்கறிஞர் சங்கத்தில் உறுப்பினராகும்பட்சத்தில் அவர்கள் சட்டப்புத்தகங்களை வாங்கிக் கொள்ளும் பொருட்டு ஒருவருக்கு ரூ.50,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. 2021-2022-ஆம் ஆண்டு இதற்காக ரூ.10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 7. சமூகப் பொருளாதார முன்னேற்றம்

2016-ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம் மற்றும் அரசால் மாற்றுத்திறனாளிகளின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

### 7.1. அரசு வேலைவாய்ப்பு

அரசுத் துறைகள் / நிறுவனங்கள் / உள்ளாட்சி மன்றங்கள் / அரசு பள்ளிகள் ஆகியவற்றில் மாற்றுத்திறனாளிகளுக்கு நான்கு சதவிகித இடஒதுக்கீடு 2016-ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் பிரிவு 34-ன் படி வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் பணியாற்ற தகுதிவாய்ந்த பணியிடங்கள் கண்டறியப்பட்டு இந்த இடஒதுக்கீட்டினை வழங்கிட வேண்டுமென மேற்படி சட்டம் வரையறுக்கின்றது. அதனடிப்படையில் அரசுத் துறைகளில் உள்ள 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியிடங்கள் அனைத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்ததென கண்டறியப்பட்டுள்ளன. 'ஏ' மற்றும் "பி' பிரிவு பணியிடங்களில் இதுவரை மொத்தம் 559 பணியிடங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு கண்டறியப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணியிடங்களை நிரப்பத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் அதேவேளையில் பின்னடைவுப் பணியிடங்களை நிரப்புவதற்கான சிறப்பு நடவடிக்கையும் அரசால் எடுக்கப்படுகிறது. இந்த

இடஒதுக்கீட்டின் அடிப்படையில் இதுவரையில் 1645 நபர்கள் அரசுப் பதவிகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## 7.2. தனியார் துறையில் வேலைவாய்ப்பு

தனியார் துறைகளில் மாற்றுத் திறனாளிகள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு உதவிடும் பொருட்டு சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்கும் சிறந்த நிறுவனங்களுக்கு சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று விருதுகள் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர்.

## 7.3.போட்டித்தேர்வுகளில் தேர்ச்சிப் பெறுவதற்கு ஊக்கத்தொகை

ஒன்றியத் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப்பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குடிமைப்பணிகள் ஆகியவற்றிற்கான முதல்நிலை தேர்வுகளில் தேர்ச்சி பெறும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ரூ.50,000/- ஊக்கத்தொகை

வழங்கப்படுகிறது. 2021-2022-ஆம் ஆண்டு இதற்கென ரூ.4.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 7.4. சுயவேலைவாய்ப்பு

மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு வழங்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் அரசால் மேற்கொள்ளப்படும். அதேவேளையில் இவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்த சுயதொழில் செய்யவும் ஊக்குவிக்கப்படுகின்றனர். இதற்காக அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரம் பின்வருமாறு:-

#### 7.4.1.மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்குதல்

மாற்றுத்திறனாளிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் தாய்மார்கள் ஆகியோருக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. 2021-2022-ஆம் ஆண்டில் இதற்காக ரூ.147.63 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 7.4.2.குறுதொழில் மற்றும் பெட்டிக்கடை துவங்க நிதியுதவி

மாற்றுத்திறனாளிகளால் துவக்கப்படும் குறு தொழில்கள் மற்றும் பெட்டிக் கடைகளுக்கு நிதியுதவியாக ரூ.25,000/- வழங்கப்படுகிறது. கடந்த 2020-2021-ஆம் ஆண்டில் 1191 மாணவர்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர். 2021-2022-ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.400.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 7.4.3. பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்:

சுயதொழில் தொடங்குவதற்காக வங்கிகளில் இருந்து கடன்பெறும் மாற்றுத் திறனாளிகள் அனைவரும் கடன் தொகையில் ஐந்து சதவிகிதம் பங்குத் தொகையாக செலுத்த வேண்டும். இந்த பங்கு தொகையை அரசு மானியமாக வழங்குகிறது. இம்மானியத்தை பெறுவதற்கு மாவட்ட தொழில் மையத்தின் மூலம் விண்ணப்பிப்பவர்களில் பயனாளிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழு தேர்வு செய்கிறது. கடந்த 2020-2021-ஆம் ஆண்டில் 20 நபர்கள் இதன் மூலம்

பயனடைந்துள்ளனர். 2021-2022-ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 7.4.4.வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டம்

வேலைவாய்ப்பற்றவர்களின் தேவைகளை நிறைவேற்றிடும் இத்திட்டத்தில் வங்கி கடன் பெறுவதற்கான ஐந்து சதவிகித பங்கு தொகை அரசால் வழங்கப்படுவதுடன் இத்திட்டத்திலும் பயனாளிகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். கடந்த 2020-2021-ஆம் ஆண்டில் 65 நபர்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர். 2021-2022-ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.10.00 இலட்சம் நிதியொதுக்கப்பட்டுள்ளது.

### 7.4.5. தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நிதியுதவி

மாற்றுத் திறனாளிகள் சுயதொழில் தொடங்குவதற்கு தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும்

வளர்ச்சிக் கழகம் வட்டியில்லா கடன் மாநில கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்குகின்றது. ஒவ்வொரு ஆண்டும் கனிசமான நபர்கள் இதன்மூலம் நிதியுதவி பெறுகின்றனர்.

### 7.4.6.ஆவின் பாலகம் அமைப்பதற்கான நிதியுதவி

ஆவின் பாலகங்களை அமைக்க விழையும் மாற்றுத் திறனாளிகள் வைப்புத்தொகையாக ரூ.25,000/- செலுத்த வேண்டும். இத்துடன் சேர்த்து ரூ.25,000/- மதிப்பீல் ஆவின் பொருட்களை பெற மொத்தமாக ரூ.50,000/- அரசால் நிதியுதவியாக வழங்கப்படுகிறது. கடந்த 2020-2021-ஆம் ஆண்டில் 198 நபர்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர். 2021-2022-ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.100.00 இலட்சம் நிதியொதுக்கப்பட்டுள்ளது.

### 7.5. பயிற்சி அளித்தல்

மாற்றுத் திறனாளிகளின் திறமைகளை மேம்படுத்தி அவர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பினை ஏற்படுத்திடும் பொருட்டு பல்வேறு

விதமான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:-

### 7.5.1. புத்தக கட்டுநர் பயிற்சி

பூந்தமல்லியிலுள்ள பார்வை குறைவுடையோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியில் புத்தகம் கட்டுநருக்கான பயிற்சி 22 நபர்களுக்கு அளிக்கப்படுகிறது. இதற்காக மாதம் ரூ.300/- உதவித்தொகை வழங்கப்படுகிறது. 2021-2022-ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.20.17 இலட்சம் நிதியொதுக்கப்பட்டுள்ளது.

### 7.5.2. பல்லூடகம் மற்றும் டிஜிட்டல் புகைப்படப் பயிற்சி

கை, கால் பாதிக்கப்பட்டோர் மற்றும் செவித்திறன் குறைவுடையோருக்காக பல்லூடகம் மற்றும் டிஜிட்டல் புகைப்படப் பயிற்சி சென்னையிலுள்ள தேசிய திரைப்படம் வளர்ச்சிக் கழகத்தின் வட்டார அலுவலகத்தில் வழங்கப்படுகிறது. கடந்த 2020-2021-ஆம் ஆண்டில் 250 நபர்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர். 2021-2022-ஆம் ஆண்டு

இத்திட்டத்திற்காக ரூ.37.38 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 7.5.3.செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கான பொருத்துநர் பயிற்சி

கிண்டியிலுள்ள அரசு ஐடிஐ நிறுவனத்தில் செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு பொருத்துநர் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 21 நபர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சி பெறுவோருக்கு மாதம் ரூ.300/- உதவித்தொகை வழங்கப்படுகிறது. கடந்த 2020-2021-ஆம் ஆண்டில் 8 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 8. உதவி உபகரணங்கள் வழங்குதல்

பொது இடங்களில் மாற்றுத்திறனாளிகள் தங்குதடையின்றி நடமாடும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. இவர்களின் தடையற்ற நடமாட்டத்தை உறுதி செய்வதற்குத் தேவையான உதவி உபகரணங்களை அரசு வழங்குகிறது. மூன்று சக்கர

வாகனங்கள், மடக்கும் சக்கர நாற்காலிகள், பிளாஸ்டிக் முடநீக்கியல் சாதனம், மெட்டல் முடநீக்கியல் சாதனம், தோல் பட்டை தாங்கிகள், செயற்கை அவையங்கள், கருப்புக் கண்ணாடிகள், உருபெருக்கிகள், பிரெய்லி கைகடிகாரங்கள் போன்ற உபகரணங்கள் அரசால் வழங்கப்படுகின்றது. 2021-2022-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.206.00 இலட்சம் நிதியொதுக்கப்பட்டுள்ளது. 2020-2021-ஆம் ஆண்டில் 2923 நபர்களுக்கு இத்தகைய உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

மேற்கண்டவற்றை தவிர சில சிறப்பு உதவி உபகரணங்களையும் அரசு வழங்குகின்றது. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

### 8.1. இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள்

மாற்றுத் திறனாளிகளின் சுலபமான நடமாட்டத்திற்கு உதவிட இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டம் கடந்த

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் உள்ளது. கடந்த ஆண்டு வரை 13209 நபர்களுக்கு ரூ.7912.94 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. 2021-2022-ஆம் ஆண்டு இதற்காக ரூ.4568.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**8.2.காதுகளுக்குப் பின்புறம் அணியும் காதொலிக் கருவிகள்**

செவித்திறன் பாதிக்கப்பட்டோரின் காது கேட்கும் திறனை உயர்த்தும் நோக்குடன் அவர்களுக்கு காதுகளுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் வழங்கப்படுகின்றன. 2021-2022 ஆம் ஆண்டில் 4,000 பயனாளிகளுக்கு காதொலிக் கருவிகள் வழங்க ரூ.100.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**8.3.மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட் டோர்களுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்கலிகள்**

மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களின் சுலபமான நடமாட்டத்திற்கு

உதவிட மாற்றி வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலிகள் வழங்கப்படுகின்றன. இதுவரை 4013 நபர்களுக்கு ரூ.227.86 இலட்சம் செலவில் இச்சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன. 2021-2022-ஆம் ஆண்டு இதற்காக ரூ.72.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 8.4. பார்வைத்திறன் குறைவுடையோருக்கான ஒளிரும் மடக்குக் குச்சிகள்

பார்வைத்திறன் குறைவுடையோர் எளிதாக நடமாட ஏதுவாக ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்கப்படுகின்றன. 2021-2022-ஆம் ஆண்டில் இதற்காக ரூ.210.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 8.5. குழந்தைகளுக்கான நடைபயிற்சி உபகரணங்கள்

நடமாட்டம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான நடைபயிற்சி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. 2021-2022 ஆம் ஆண்டில் இதற்காக ரூ.20.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 8.6. பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள்

நடமாட்டம் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் தங்குதடையின்றி நடமாட ஏதுவாக பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள் வழங்கப்படுகின்றன.

2021-2022 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கம் ரூ.3758.00 இலட்சமாகும்.

## 8.7. மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு நாற்காலிகள்

ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பு நாற்காலிகள் வழங்கப்படுகின்றது.

## 8.8. திறன்பேசிகள் (Smart Phones)

பார்வைத்திறன் மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு ஏற்றவாறு செயலிகள் அமையப்பெற்ற திறன்பேசிகள் வழங்கப்படுகிறது. ரூ.1000.00 இலட்சம் செலவில் 7813 பயனாளிகளுக்கு திறன்பேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

2021-2022-ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.1000.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**9. தடையில்லா உட்கட்டமைப்பு**

கட்டடங்கள், போக்குவரத்து மற்றும் இணையதளங்கள் ஆகியவற்றை மாற்றுத் திறனாளிகள் அணுக தடையில்லா உட்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டுமென 2016-ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம் வரையறுக்கிறது. இத்தகைய தடையற்ற உட்கட்டமைப்பை ஏற்படுத்த ஒன்றிய அரசால் வரையறுக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கு பின்பற்றப்பட வேண்டிய "Harmonized Guidelines and Space Standards for Barrier Free Built Environment for Persons with Disabilities and Elderly Persons", பேருந்துகளுக்கான கட்டமைப்பிற்கான நிலையான வடிவம் மற்றும் இணையதளங்களுக்கான வரைமுறைகள் ஆகியவை பின்பற்றப்பட வேண்டும். புதியதாக கட்டப்படும் இரண்டு அடுக்குகளுக்கு மேல் கொண்ட அனைத்து கட்டடங்களிலும் மின்தூக்கிகள், சாய்தள மேடை,

சிறப்பு கழிப்பறை, பார்வையற்றோருக்கான அறிவிப்பு பலகை, தனி வாகன நிறுத்தம் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட வேண்டியது கட்டாயம் என நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் ஆணையிடப்பட்டுள்ளது.

## 9.1. தடையில்லா சூழலுக்கான திட்டம் (Accessible India Campaign)

அரசுக் கட்டடங்களில் தடையற்ற சூழலை உருவாக்கும் பொருட்டு ஒன்றிய அரசால் தடையில்லா சூழலுக்கான திட்டமொன்று வகுக்கப்பட்டு அதற்காக நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. இதில் முதல் நிலையாக சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள 16 கட்டடங்களில் தடையற்ற சூழல் ரூ.22.08 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படுகிறது. இத்தொகையில் ஒன்றிய அரசால் இதுவரை ரூ.11.04 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு அதற்குண்டான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒன்றிய அரசிடமிருந்து எஞ்சிய தொகைக்கான நிதியொதுக்கம்

எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த நிலையில் 14 கட்டடங்களில் தடையற்ற சூழலை உருவாக்க ரூ.28.56 கோடி ஒன்றிய அரசால் ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன.

அதிக எண்ணிக்கையிலான கட்டடங்களில் தடையற்ற சூழலை உருவாக்கும் பொருட்டு சென்னை நகரிலுள்ள 72 கட்டடங்களில் தடையற்ற சூழலை உருவாக்குவதற்கான தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதிலும் பல்வேறு இடங்களிலுள்ள 176 கட்டடங்களில் தடையற்ற சூழலை உருவாக்குதற்கென தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநிலத்திலுள்ள 200 சுற்றுலா தளங்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களை உள்ளடக்கிய 790 அலுவலகங்களில் தடையற்ற சூழலை உருவாக்குதற்கென தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 9.2. ஒலியெழுப்பும் சமிக்ஞைகளை நிறுவுதல்

சாலை சந்திப்புகளில் பார்வைத்திறன் குறைவுடையோர் பயன்பெறும் விதமாக சென்னை நகரில் 150 இடங்களில் ஒலியெழுப்பும் சமிக்ஞைகள் நிறுவப்பட்டுள்ளன. சென்னை நகரில் 75 பேருந்துகளில் ஒலியெழுப்பும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

## 10. பல்வகை உதவித்தொகை வழங்குதல்

மாற்றுத் திறனாளிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்த பல்வேறு விதமான உதவித் தொகை அரசால் வழங்கப்படுகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

### 10.1. வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித் தொகை

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தபின் ஓராண்டுக்கும் மேலாக வேலைவாய்ப்பு பெறாத மாற்றுத் திறனாளிகள் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.600/-, பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.750/-

மற்றும் பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.1000/- என உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக 2021-2022-ஆம் ஆண்டில் ரூ.2000.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டில் இந்த உதவித்தொகை 16597 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 10.2. பராமரிப்பு உதவித்தொகை

அதிகளவில் பாதிக்கப்பட்டோருக்கு உதவிடும் பொருட்டு மாதந்தோறும் ரூ.1500/- பராமரிப்பு உதவித்தொகையாக அரசால் வழங்கப்படுகிறது. பல்வேறு விதமான மாற்றுத்திறனாளிகளுக்கான வழங்கப்படும் பராமரிப்பு உதவித்தொகை விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | மாற்றுத் திறனாளியின் வகை | வகைப்பாடு | பயனாளிகள் |
|---|---|---|---|
| 1 | மனவளர்ச்சிகுன்றியோர் | 40% மற்றும் அதற்கு மேல் | 183352 |
| 2 | கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் | 75% மற்றும் அதற்கு மேல் | |
| 3. | பார்க்கின்சஸ் நோய், முதுகு தண்டுவடம் | 40% மற்றும் அதற்கு மேல் | 1695 |

| | | | |
|---|---|---|---|
| | பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் Multiple Sclerosis நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் | | |
| 4 | தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் | 40% மற்றும் அதற்கு மேல் | 3422 |
| 5 | தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் | 40% மற்றும் அதற்கு மேல் | 7675 |
| | | **மொத்தம்** | **196144** |

2021-2022-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.40463.59 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கூடுதலான பயனாளிகளுக்கு இந்த உதவித் தொகையை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 10.3. அதிக உதவி தேவைப்படும் நபர்களுக்கு உதவித் தொகை

அதிக உதவி தேவைப்படும் மாற்றுத் திறனாளிகள் அதன்பொருட்டு ஒரு உதவியாளரை வைத்துக் கொள்ளலாம். அத்தகைய உதவியாளருக்கு மாதம் ரூ.1000/- அரசால் வழங்கப்படுகிறது. 2021-2022-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.96.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 10.4. திருமண உதவித்தொகை

மாற்றுத் திறனாளிகளுடன் நடைபெறும் திருமணங்களை ஊக்குவிக்கும் பொருட்டு ரூ.25,000/- உதவித்தொகையாகவும் தாலிக்கு தங்கமாக 8 கிராமும் வழங்கப்படுகிறது. மணமக்களில் எவரேனும் பட்டப்படிப்பு அல்லது பட்டயப்படிப்பு முடித்தவராக இருப்பின் உதவித்தொகையாக ரூ.50,000/- வழங்கப்படுகிறது. வழங்கப்பட வேண்டிய மொத்த உதவித் தொகையில் 50 சதவிகிதம் ரொக்கமாகவும் எஞ்சிய 50 சதவிகிதம் தேசிய சேமிப்பு பத்திரங்களாவும் வழங்கப்படுகிறது.

2021-2022-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.545.86 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 10.5. தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நலவாரியம்

மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக செயல்படுத்தப்பட வேண்டிய நலத்திட்டங்கள் குறித்து அரசுக்கு பரிந்துரைக்கும் பொருட்டு தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நலவாரியம்

அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள பின்வரும் நலத் திட்டங்களை அரசு செயல்படுத்துகின்றது:-

| | | | |
|---|---|---|---|
| 1. | **தனி நபர் விபத்து நிவாரணம்** | | |
| | **இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணம் பின்வருமாறு** | | |
| | (அ) | விபத்தினால் இறப்பு | ரூ.1,00,000/- |
| | (ஆ) | கை அல்லது கால் இழப்புஇருகண் பார்வை இழப்புமற்றும் முழுமையான செயலிழப்பு | ரூ. 1,00,000/- |
| | (இ) | ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் பார்வை இழப்புஅல்லதுமுழுமையான செயலிழப்பு | ரூ.50,000/- |
| | (ஈ) | நிரந்தரம், மொத்த ஊனம் ('ஆ' மற்றும் 'இ'தவிர்த்து) | ரூ.25,000/- |
| 2 | **மாற்றுத் திறனாளி நபரின் இறுதிச் சடங்கிற்கு** | | ரூ.2,000/- |
| 3 | **மாற்றுத் திறனாளி நபரின் இயற்கைமரணத்திற்கு** | | ரூ. 15,000/- |
| 4 | **மாற்றுத் திறனாளியின் மகன் மற்றும் மகள் கல்வி பயில வருடாந்திர உதவித் தொகை** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | (அ) | (i) | 10 -ஆம் வகுப்புபயிலும் மகளுக்கு | ரூ. 1,000/- |
| | | (ii) | 10-ஆம்வகுப்புதேர்ச்சி பெற்றமகன் மற்றும் மகள் | ரூ.1,000/- |
| | (ஆ) | (i) | 11-ஆம்வகுப்பு மற்றும் அதற்கு சமமாக பயிலும் மகளுக்கு | ரூ. 1,000/- |
| | (இ) | (i) | 12-ஆம் வகுப்பு அல்லது அதற்கு சமமாகப் பயிலும் மகளுக்கு | ரூ.1,500/- |
| | | (ii) | 12-ஆம் வகுப்பு தேர்வுதேர்ச்சி பெற்ற மகன் மற்றும் மகளுக்கு | ரூ. 1,500/- |
| | (ஈ) | (i) | முறையான பட்டப் படிப்பு பயின்று வரும் மகன் மற்றும் மகள் | ரூ. 1,500/- |
| | | (ii) | மகன் மற்றும் மகள் விடுதியில் தங்கிப் பயில்வதற்காக | ரூ.1,750/ |
| | | (iii) | முறையான பட்ட மேற்படிப்பு பயின்று வரும் மகன் மற்றும் மகளுக்கு | ரூ.2,000/- |
| | | (iv) | மகன் மற்றும் மகள் விடுதியில் தங்கிப் பயில்வதற்காக | ரூ.3,000/- |
| | (உ) | (i) | மகன் மற்றும்மகள் சட்டம், பொறியியல், மருத்துவம் , | ரூ.2,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கால்நடை அறிவியல் அல்லது அதற்கு இணையான தொழிற்கல்விப் படிப்புகள் பயில்வதற்காக | |
| | | (ii) | மகன் மற்றும் மகள் விடுதியில் தங்கிப் பயில்வதற்காக | ரூ. 4,000/- |
| | | (iii) | மகன் மற்றும் மகள் தொழிற்கல்வி மற்றும் பட்ட மேற்படிப்பு பயில்வதற்காக | ரூ. 4,000/- |
| | | (iv) | மகன் மற்றும் மகள் விடுதியில் தங்கிப் பயில்வதற்காக | ரூ. 6,000/- |
| | (ஊ) | (i) | மகன் மற்றும் மகள் தொழிற்பயிற்சி நிலையம் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் பயில்வதற்காக | ரூ. 1,000/- |
| | | (ii) | மகன் மற்றும் மகள் விடுதியில் தங்கிப் பயில்வதற்காக | ரூ. 1,200/- |
| 5 | **திருமண உதவித் தொகை (கணவன் அல்லது மனைவி ஒருவருக்கு மட்டும்)** | | | ரூ. 2,000/- |
| 6 | **வாரியத்தின் பெண் உறுப்பினர்களுக்கு மகப்பேறு தொடர்பான நிதியுதவி** | | | |
| | 1. மகப்பேறு | | | ரூ.6,000/- |
| | 2. கருச்சிதைவு | | | ரூ.3,000/- |

| | | |
|---|---|---|
| | 3. கருக்கலைப்பு | ரூ.3,000/- |
| 7 | **மாற்றுத் திறனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு நிதியுதவி** | ரூ.500/- |

2021-2022-ஆம் ஆண்டில் இதற்காக ரூ.329.62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 11. பயணக்கட்டண சலுகை

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையை வைத்துள்ள மாற்றுத் திறனாளிகள் அனைவரும் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணக் கட்டண சலுகை வழங்கப்படுகின்றனர். பல்வேறு விதமான கட்டண சலுகைகள் குறித்த விவரம் பின்வருமாறு:-

### 11.1. நூறு சதவிகித பயணக்கட்டண சலுகை

பார்வைத்திறன் குறைவுடைய மாற்றுத் திறனாளிகள் அனைவரும் நூறு கிலோ மீட்டர் தொலைவிற்குள் பயணம் செய்யும் நேர்வுகளில் நூறு சதவிகித பயணக்கட்டண சலுகை பெறுகின்றனர். இதர வகையான மாற்றுத் திறனாளிகள் தங்களது

இருப்பிடத்திலிருந்து கல்வி கற்குமிடம், சிகிச்சைக்கான மருத்துவமனை, பயிற்சி பெறுமிடம், பணிபுரியுமிடம் ஆகியவற்றிற்கு செல்லும்போது நூறு சதவிகித பயணக்கட்டண சலுகை பெறுகின்றனர். மனநலம் பாதிக்கப்பட்டவருடன் ஒரு உதவியாளர் செல்வதற்கும் சலுகை வழங்கப்படுகிறது.

### 11.2. 75 சதவிகித பயணக்கட்டண சலுகை

அனைத்து விதமான மாற்றுத் திறனாளிகளும் எவ்வளவு தூரம் பயணம் செய்தாலும் எவ்வளவு முறை பயணம் செய்தாலும் 75 சதவிகித பயணக் கட்டண சலுகை பெறுகின்றனர். மாற்றுத்திறனாளி தனியாக பயணம் செய்ய இயலாத பட்சத்தில் அவருடன் ஒரு உதவியாளரும் 75 சதவிகித கட்டண சலுகையில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். 2021-2022ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.3300.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 12. 1999 ஆம் ஆண்டு புற உலக சிந்தனையற்றோர், மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் பல்வகை குறைபாடுடையோரின் நலனுக்கான தேசிய அறக்கட்டளைச் சட்டம்

1999-ஆம் ஆண்டு புற உலக சிந்தனையற்றோர், மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் பல்வகை குறைபாடுடையோரின் நலனுக்கான தேசிய அறக்கட்டளைச் சட்டத்தின் படி இவ்வகையானோருக்கான சட்டப்பூர்வமான பாதுகாவலரை நியமிப்பது மற்றும் பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொள்வது ஆகியவற்றிற்காக மாவட்ட ஆட்சித்லைவர் தலைமையில் உள்ளூர் நிலையிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் படி 2020-2021-ஆம் ஆண்டு 2031 எண்ணிகையிலான பாதுகாவலர் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 13. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்

ரூ.72,000-க்கும் குறைவான ஆண்டு வருவாய் கொண்டுள்ள குடும்பத்தினருக்கு இத்திட்டத்தின் மூலம் மருத்துவ காப்பீடு வழங்கப்படுகிறது. குடும்பத்தில் எவரேனும் மாற்றுத்திறனாளியாக இருப்பின் வருமான வரம்பின்றி ஒட்டுமொத்த குடும்பத்திற்கும் இத்திட்டத்தில் மருத்துவ காப்பீடு வழங்கப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட சிகிச்சைகளுடன் Cochlear implant surgeries, Corrective surgeries, Fitting of functional limbs போன்ற சிகிச்சைகளும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

## 14. விழிப்புணர்வு பிரச்சாரம்

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வு பிரச்சாரம் அரசால் மேற்கொள்ளப்படுகிறது. 2021-2022-ஆம்

ஆண்டில் இதற்காக ரூ.6.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 15. விருதுகள்

மாற்றுத்திறனாளிகளுக்கு சிறந்த சேவை புரியும் தனிநபர்கள் / நிறுவனங்கள் தக்கவாறு கௌரவிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அவர்களுக்கு சுதந்திர தினம் மற்றும் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் ஆகிய தினங்களில் விருதுகள் வழங்கப்படுகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

### 15.1. சுதந்திர தின விருதுகள்

சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் விருதுகளின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | விருதின் பெயர் | விருதின் விவரம் |
|---|---|---|
| 1. | சிறந்த தனியார் தொழிலதிபர் விருது. (மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு வழுங்கியமைக்காக) | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2. | சிறந்த நிறுவனம் விருது (மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த சேவைபுரிந்தமைக்காக) | 10 கிராம் தங்கப் பதக்கம் ரூபாய் 50,000/- ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ் |
| 3. | சிறந்த சமூகப் பணியாளர் விருது (மாற்றுத் திறனாளிகளுக்கு அரும்பணியாற்றியமைக்காக) | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4. | சிறந்த மருத்துவர் விருது (மாற்றுத் திறனாளிகள் பயனடையும் வகையில் சிறப்பாக சேவையாற்றியமைக்காக) | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5. | சிறந்த மாவட்ட ஆட்சியர் விருது(மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்டங்களை சிறப்பாகசெயல்படுத்தியமைக்காக) | 10 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூபாய் 25,000/- ரொக்கப் பரிசு |
| 6. | சிறந்த வங்கிக்கான விருது (மாற்றுத்திறனாளிகளுக்கு அதிக அளவில் வங்கிக் கடன் வழங்கிய சிறந்த மாவட்ட கூட்டுறவு வங்கி) | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

2021-2022-ஆம் ஆண்டில் இவ்விருதுகள் வழங்கும் பொருட்டுரூ.5.24 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

## 15.2.சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்திற்கான விருதுகள்

மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச தினமாக கொண்டாடப்படும் டிசம்பர் திங்கள் மூன்றாம் நாளன்று மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த சேவை புரிந்தோருக்கான விருதுகள் வழங்கப்படுகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | விருதின் பெயர் | விருதுகள் எண்ணிக்கை | விருதின் விவரம் |
|---|---|---|---|
| 1) | சிறந்த நிறுவனம் | 1விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2) | சிறந்த சமூகப் பணியாளர் | 1விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 3 | சிறந்த ஆசிரியர் | 3 விருதுகள் | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4 | சிறந்த பணியாளர் | 5 விருதுகள் | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

| வ. எண் | விருதின் பெயர் | விருதுகள் எண்ணிக்கை | விருதின் விவரம் |
|---|---|---|---|
| 5 | மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனம் | 1 விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 6 | ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர். | 2 விருதுகள் | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 7 | மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனர் | 2 விருதுகள் | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| | **மொத்தம்** | **15 விருதுகள்** | |

இந்நாளில் நடைபெறும் கொண்டாட்டங்களில் பங்குபெற ஏதுவாக அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் ஒரு நாள் சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கப்படுகிறது.

இக்கொண்டாட்டங்களுக்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.50,000/- நிதி ஒதுக்கப்படுவதுடன்

2021-2022-ஆம் ஆண்டில் இதற்காக ரூ.37.77 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 16. புதிய முயற்சிகள்

மாற்றுத்திறனாளிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள அரசு அவர்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அவை பின்வருமாறு:-

i) 2016-ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் படி 20 நபர்களுக்கு மேல் பணியாற்றும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு உண்டான பணியிடங்களை கண்டறிதல் மற்றும் அப்பணியிடங்களில் நியமனம் செய்தல், பணியிடங்களில் தடையற்ற சூழலை உருவாக்குதல் ஆகியவற்றிற்காக "சம வாய்ப்புக் கொள்கை" உருவாக்கிட வேண்டும். தனியார் நிறுவனங்களைப் பொருத்தவரை தொழிலாளர் நல ஆணையரும் தொழிற்சாலைகளை பொறுத்தவரை தொழிற்சாலைகள் பாதுகாப்பு

இயக்குநரும் இந்த சம வாய்ப்புக் கொள்கையை இயற்ற பற்றாளர்களாக (Nodal Officer) நியமிக்கப்பட்டுள்ளனர்.

ii) அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகள் அனைவரும் உதவியாளர் ஒருவருடன் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

iii) கொரோனா பெருந்தொற்று காலத்தில் மாற்றுத்திறனாளி மாணவர்களிடையே நோய் தொற்று எளிதில் பரவக்கூடிய நிலையை உணர்ந்து 2021-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற பன்னிரெண்டாம் வகுப்பிற்கான துணைத் தேர்வுகளை எழுத விண்ணப்பித்துள்ள மாற்றுத் திறனாளி மாணவர்கள் அனைவருக்கும் விலக்களித்து அவர்கள் தேர்வானதாக அறிவிக்கப்பட்டது.

iv) பராமரிப்பு உதவித்தொகை வேண்டி விண்ணப்பித்து காத்திருப்போர் பட்டியலில்

உள்ள அனைவருக்கும் உதவித்தொகை வழங்கும் பொருட்டு 2021-2022-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடாக ரூ.404.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

v) விண்ணப்பித்த மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் உதவி உபகரணங்கள் வழங்கும் பொருட்டு 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.62.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

vi) மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கு தேவைப்படும் உதவி உபகரணத்தை அவர்களின் சுய விருப்பத்தின் அடிப்படையிலேயே பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக நிலையான நிதியுதவியினை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் விருப்பத்தின் படியான உதவி உபகரணங்கள் அரசால் வழங்கப்படும் நிதியுதவியை விட அதிகமாக இருக்கும் பட்சத்தில் கூடுதல் செலவினம் பயனாளியால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

vii) உலக வங்கி உதவியுடன் "RIGHTS" என்ற முன்மாதிரியான திட்டம் ஒன்றினை அரசு செயல்படுத்த உத்தேசித்துள்ளது. இத்திட்டம் நமது நாட்டில் மட்டுமின்றி உலகிலேயே முதன்முறையாக செயல்படுத்தப்படும் முன்னோடி திட்டமாகும். அரசால் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து திட்டங்களின் பயன்களை அனைத்து மாற்றுத் திறனாளிகளும் விடுபடாமல் பெறும் பொருட்டு மாநிலத்தின் வட்டார மற்றும் உட்பிரிவு நிலை வரை துறையின் நடவடிக்கைகளை விரிவுபடுத்த இத்திட்டம் வழிவகை செய்கின்றது. ஆறு ஆண்டுகளில் ரூ.1702 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் நான்கு முக்கிய அம்சங்கள் பின்வருபவையாகும்:-

அ. மாற்றுத் திறனாளிகளை ஆரம்ப நிலையில் கண்டறிதல் மற்றும் ஒருங்கிணைத்தலுக்காக நிலையான

வழிமுறைகளை உருவாக்குதல், தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்கள் செயலாக்கம் குறித்து வரையறுத்தல், பதிவு செய்யவும் சான்றளிக்கவும் வழிமுறைகளை உருவாக்குதல், தகவல் மேலாண்மைத் திட்டத்தை உருவாக்குதல்.

ஆ மாற்றுத் திறனாளிகளுக்கான நோய் தடுப்பு பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு சேவைகள், தொழிற்கல்வி, தன்னிறைவு, வேலை வாய்ப்பு ஆகியவை சென்றடைவதை உறுதி செய்தல்

இ. மாற்றுத்திறனாளிகளின் பின்னடைவு மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்துதல், சமூகம் சார்ந்த மறுவாழ்வுப் பணிகள், உபகோட்ட தலைமையிடங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட மறுவாழ்வுப் பணிகள், வட்டார தலைமையிடங்களில் அனைத்து வசதிகளுடன் கூடிய பராமரிப்பு மையங்கள், நடமாடும் சிகிச்சை வாகனங்கள், தடையற்ற உட்கட்டமைப்பு,

வீட்டுவசதி, போக்குவரத்து மற்றும் இச்சேவைகள் சென்றடைவதை உறுதி செய்ய நிதி ஆதாரத்தை ஏற்படுத்துதல்

ஈ. மாற்றுத் திறனாளிகளுக்கான நிறுவன திறன் மேம்படுத்துதல், செயல்படுத்துதல், திட்ட செயலாக்கம், திட்ட செயல்பாட்டிற்கான வழிமுறைகள், மனித வளத்தை உறுதிபடுத்த மேலாண்மைத் திட்டம், மின்னணு நடைமுறையை உருவாக்குதல், நிதி மேலாண்மை நடைமுறை உருவாக்குதல், மனித வளத்தை மேம்படுத்த பயிற்சி அளித்தல்

viii) துறையால் வழங்கப்படும் "Unique Disability Identity Card (UDID card)" மாற்றுத்திறனாளிகளுக்கு தகுந்த அடையாள ஆவணமாக இருப்பதுடன் அரசால் அளிக்கப்படும் பல்வேறு நலத் திட்டங்களை பெறுவதற்கும் உதவுகின்றது. இதுவரை 3.18 இலட்சம் நபர்களுக்கு இந்த அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த

அட்டைகளைப் பெறுவதற்கு தேவையான அனைத்துப் படிவங்களையும் பூர்த்தி செய்ய மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிடும் பணியில் வருவாய் துறை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் மீண்டும் பரிசீலனை செய்யப்படுகின்றன. மாற்றுத் திறனாளிகள் குறித்து சான்று வழங்க கூடுதல் மருத்துவர்களும் மற்றும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்ய கூடுதல் தகவல் தொகுப்புப் பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ix) இத்துறையின் செயல்பாடுகளை எளிமையாக்க துறையால் பயன்படுத்தப்படும் பின்வரும் படிவங்கள் கணினிமயமாக்கப்படும்:-

அ. 2017-ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகளுக்கான விதிகளில் பணி வழங்குபவரால் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அனுப்பப்பட வேண்டிய படிவம்-I

ஆ 2017-ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகளுக்கான விதிகளில் பணி வழங்கியது தொடர்பாக பணி வழங்குபவரால் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அனுப்பப்பட வேண்டிய படிவம்-II

இ. 2017-ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகள் உரிமைகளுக்கான விதிகளில் அரசுத் துறைகளால் மாற்றுத் திறனாளிகளின் பணியமர்த்தியது தொடர்பாக பராமரிக்கப்பட வேண்டிய படிவம்-III

ஈ. 2018-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் உரிமைகளுக்கான விதிகளில் பாதுகாவலர் நியமனம் தொடர்பாக அளிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவம்-I

உ. 2018-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் உரிமைகளுக்கான விதிகளில் சான்றிதழ் வழங்க / பதிவினை புதுப்பிக்க அளிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவம்-III


## 17. முடிவுரை

மாற்றுத்திறனாளிகளின் தேவைகளை உணர்ந்துள்ள அரசு அவற்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதுடன் அதற்கான பல்வேறு நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. மாற்றுத்திறனாளிகளை தன்னிறைவு பெற்றவர்களாக மாற்றவேண்டுமென்ற அரசின் கோட்பாட்டை அடைவதற்கு இடையூறாக உள்ள அனைத்துத் தடைகளையும் நீக்கி அவர்கள் சமூகத்தில் உரிய அந்தஸ்துடன் வாழத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

**மு.க. ஸ்டாலின்**
**முதலமைச்சர்**



மாற்று வழியில் தொடர்பு கொள்ள உதவும் ஆவாஸ் – மென்பொருளுடன் கூடிய கையடக்கக் கணினி



பார்வையற்றோருக்கான படிக்க உதவும் கருவி
'ஏஞ்சல் ப்ரோ டெய்சி டிஜிட்டர் பிளேயர்'



செயற்கை அவயம்



பார்வையற்றோருக்கான பிரெய்லி - கைக்கடிகாரம்



காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவி



மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு சக்கர நாற்காலி



தோற்பட்டை தாங்கிகள்



**கருப்புக் கண்ணாடி**



**உருப்பெருக்கி**



இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்



மூன்று சக்கர சைக்கிள்



மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான நடைப்பயிற்சி உபகரணம்



மடக்கு சக்கர நாற்காலி






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திருநெல்வேலி மாவட்டத்தில், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்திற்கான புதிய கட்டடம் 31.07.2021 அன்று திறந்து வைக்கப்பட்டது.

## மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.81362.56 கோடி

## மறுவாழ்வு திட்டங்கள் வாரியாக ஒதுக்கீடு

| வ. எண் | மறுவாழ்வு திட்டங்கள் | தொகை (இலட்சத்தில்) | ஒதுக்கீடு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | ஆரம்ப நிலையில் குறைகளை கண்டறிதல் மற்றும் தடுத்தல் | 926.55 | 1.13 |
| 2 | சிறப்பு கல்வி | 4588.23 | 5.63 |
| 3 | வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சி | 484.95 | 0.59 |
| 4 | சமூக பாதுகாப்பு (பராமரிப்பு உதவித் தொகை, இலவச பேருந்து சலுகை மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு பராமரிப்பு மானியம் வழங்குதல்) | 48913.28 | 60.11 |
| 5 | உதவி உபகரணங்கள் | 9570.50 | 11.76 |
| 6 | தடையற்ற சூழல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 2918.63 | 3.58 |
| 7 | இதர வகை (சம்பளம் மற்றும் நிர்வாக செலவினங்கள்) | 13960.42 | 17.20 |
| | **மொத்தம்** | **81362.56** | **100** |


1.13%
5.63%
0.59%
17.20%
3.58%
11.76%
60.11%
ஆரம்ப நிலையில் குறைகளை கண்டறிதல் மற்றும் தடுத்தல்
சிறப்பு கல்வி
வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சி
சமூக பாதுகாப்பு (பராமரிப்பு உதவித் தொகை, இலவச பேருந்து சலுகை மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு பராமரிப்பு மானியும் வழங்குதல்)
உதவி உபகரணங்கள்


நிதி ஒதுக்கீடு - ஒப்பீட்டு நிலை 2020-2021 மற்றும் 2021-2022
ரூபாய் (இலட்சத்தில்)
100000
80000
60000
40000
20000
0
2020–2021
2021–2022
நிதி ஒதுக்கீடு – ஒப்பீட்டு நிலை 2020–2021 மற்றும் 2021–2022
66708.02
81362.56